Malai Malar 08 July 2007



கருத்தரங்கில் ஜகி வாசுதேவ் பேசிய காட்சி. அருகில் டி.ஆர்.கார்த்திகேயன் உள்ளார்.

ஈஷா யோகா மையத்தில்

# 'விவசாயி நமது வளர்ப்பு தாய்' கருத்தரங்கு

## ஜகி வாசுதேவ் பங்கேற்பு

கோவை, ஜுலை. 8-

கோவை வெள்ளியங்கிரி மலை அடிவாரத்தில் உள்ள ஈஷா யோகா மையம் சார்பில் "விவசாயி நமது வளர்ப்பு தாய்" என்ற கருத்தரங்கு நடந்தது. சி.பி.ஐ. முன்னாள் இயக்குனர் டி.ஆர்.கார்த்திகேயன் முன்னிலை வகித்து பேசினார்.

பின்னர் ஈஷா ஆக்ரோ சர்வீசஸ் என்ற பெயரில் விவசாயிகள் சேவை மையம் கோபியில் அமைய உள்ளது என்று ஈஷாவின் திட்ட இயக்குனர் சேகர் கூறினார். மேலும் இது தவிர 150 கிராமங்களில் மாதிரி சாகுபடி பண்ணைகள் உருவாக்கப்படும் என்றார்.

மேலும் உடல் மன நலத்திற்கு யோகாவும் சமூக தனிமனித நலத்திற்கு சேவை செய்ய மரக்கன்றுகள் நடுதல் மட்டுமின்றி விவசாய சேவை மையம் ஈஷாவின் தொண்டு உள்ளத்தை காண்பிக்கிறது என்று கார்த்திகேயன் பேசினார்.

இதனை அனைத்து விவசாய மக்களுக்கு எடுத்து செல்ல வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்தார். இதில் கலந்துகொண்ட சத்குரு புரட்சி என்பது கோபத்தினால் நிகழக்கூடாது அறிவின் அடிப்படையில் நிகழ வேண்டும். இந்தியாவின் பிற தொழிலில் ஈடு பட்டுள்ள அனைவரும் வெல்லுவதில்லை. விவசாயி நிலை அப்படி இல்லை என்றார். ஈஷாவின் இன்னிசை நிகழ்ச்சியோட்டகருத்தரங்கு முடிவடைந்தது.